பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பலியான மல்லிப்பட்டினம் அரசு பள்ளி ஆசிரியை செல்வி. ரமணி உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கும், ஆசிரியப் பெருமக்களுக்கும் ஆறுதலை தெரிவித்தார்.

திருவாரூர் மறைந்த மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைச்செல்வம் அவர்களின் 17 ம் ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி தமிழ்நாடு அரசின் தொழில்முதலீடு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா கொரடச்சேரி பூண்டி கே.கலைச்செல்வம் அவர்களின் இல்லத்தில் உள்ள திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் மற்றும் ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ்.டி.முத்துவேல், சித்தேரி சிவா, நா.கவியரசு, கே. வி.கே.ஆனந்த்,பேரூர் செயலாளர் பூண்டி.கே.கலைவேந்தன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் திருச்சி மாவட்டத்தில்

9 சட்டமன்றத் தொகுதிகளிலும் வெற்றிக்குப் பாடுபட வேண்டும்!

அமைச்சர் கே. என். நேரு பேச்சு!

திருச்சி. நவ. 21 -

திருச்சியில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில் மத்திய மற்றும் வடக்கு மாவட்ட தி.மு.க. செயல் வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு முன்னிலை வகித்து பேசியதாவது:

திருச்சி மாவட்டத்தில் உள்ள ஒன்பது சட்டமன்றத் தொகுதிகளிலும் நாம் வெற்றி பெற்றால்தான் மீண்டும் தளபதி ஸ்டாலின் அவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்பார்.

எனவே அதற்கு நீங்கள் உங்களை தயார்படுத்திக் கொள்ளுங்கள். அதேபோல் தொகுதிவாரியாக நம்முடைய தலைவர் கலைஞரின் திருஉருவச் சிலை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அனைத்து தொகுதிகளிலும் தலைவரின் திருவுருவ சிலைகள் விரைவில் அமைக்கப்படும். கலைஞர் தான் நம் அனைவரையும் உருவாக்கியவர் கலைஞர் தான் நம்மை ஆளாக்கியவர் கலைஞர் தான் நம்மை வளர்த்து எடுத்தவர்.

இன்றைய நிலையில் தளபதியின் மீது பல குற்றச்சாட்டுகளை முன்வைத்து குறைகளை சொல்லி அடுத்து நாங்கள் தான் என்று பலர் பேசி வரும் நிலை ஏற்பட்டுள்ளது இந்த அறிவாலயத்தில் இருந்து நாங்கள் சொல்லுகிறோம் மீண்டும் தலைவர் தளபதி தான் முதல்வராக ஆட்சி பொறுப்பில் ஏறுவார். இன்று எதிர்க்கட்சி

தலைவர்கள் கூட சிலர் அடுத்த முதல்வர் தளபதி தான் என்று கூறுகிறார்கள்.

2026 ஆம் சட்டமன்றத் தேர்தலில் முன்னோட்டமாக நம்முடைய துணை முதலமைச்சர் திருச்சிக்கு வருகை தந்து இளைஞர் அணி கூட்டத்தில் பங்கேற்று, புதிய நூலகத்தை திறந்து வைத்து, கலைஞரின் திரு உருவ சிலையை திறந்து வைத்து சிறப்பிக்க உள்ளார். எனவே தளபதியின் வெற்றி என்பது இந்த திருச்சியில் இருந்துதான் ஆரம்பிக்கிறது. நிச்சயம் நம்முடைய தளபதி மீண்டும் முதல்வர் ஆவார் என்று கூறினார். இக்கூட்டத்தில் தீர்மானம்:

23.11.2024 சனிக்கிழமை அன்று திருச்சிக்கு வருகை தரும் துணை முதலமைச்சரும் கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு கழக முதன் மைச் செயலாளர் கே.என் நேரு தலைமையில் திருச்சி மத்திய மற்றும் வடக்கு மாவட்ட திமுக சார்பில் கழகத்தினர் அனைவரும் கலந்து கொண்டு உற்சாக வரவேற்பு அளிப்பது.

துறையூரில் நடைபெறும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலை திறப்பு விழா நிகழ்ச்சியிலும், பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண்நேருவின் புதிய அலுவலக திறப்பு விழா நிகழ்ச்சியிலும் கழக நிர்வாகிகள், முன்னோடிகள், செயல்வீரர்கள் பொது மக்கள் என அனைவரும் பெருந் திரளாக கலந்து கொண்டு விழாவினை சிறப்பிப்பது. வருகின்ற நவம்பர் 27ம்தேதி அன்று பிறந்த நாள் காணும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இக்கூட்டம் தனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு அன்றைய தினம் மாவட்டம் முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவது என தீர்மானி க்கப்படுகிறது.

தி.மு.க. கழகத்தலைவரும், தமிழக முதல்வருமான தளபதி அவர்களின் அறிவிற்பிற்கிணங்க வரும் சட்டமன்ற தேர்தலில் 200 தொகுதிகளில் வெற்றி பெறும் வகையில் திருச்சி மத்திய மற்றும் வடக்கு மாவட்டங்களில் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி மற்றும் தேர்தல் பணிகளில் கழகத்தினர் அனைவரும் ஒருங்கிணைந்து வெற்றிக்கு அயராது பாடுபடுவது என உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் அவைத்தலைவர்கள் எஸ்.ஏ. அம்பிகாபதி, பேரூர் தர்மலிங்கம் ஆகியோர் தலைமை வகித்தனர். கூட்டத்தில் மாவட்ட செயலாளர்கள் வைரமணி, காடுவெட்டி தியாகராஜன் எம்.எல்.ஏ. மாநகர செயலாளர் மேயர் அன்பழகன், எம்.எல்.ஏக்கள் பழனியாண்டி, சவுந்தரபாண்டியன், கதிரவன், ஸ்டாலின் குமார், முன்னாள் எம்.எல்.ஏ. அன்பில் பெரியசாமி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் தர்மன் ராஜேந்திரன், சேர்மன் துரைராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் முத்துச் செல்வம், விஜயா ஜெயராஜ், அல்லூர் கருணாநிதி, செயற்குழு உறுப்பினர் கிரப்பட்டி செல்வம், காஜாமலை விஜய், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், மாநில மாணவரணி துணைச் செயலாளர் ஆனந்த், கருணை ராஜா செவந்திலிங்கம், மாநகர துணைச் செயலாளர்கள் கவுன்சிலர் கலைச்செல்வி, மாவட்ட மகளிர் அமைப்பாளர் கவிதா மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

இந்தியாவில் – குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாட்டில்

சமூக அடையாளம் - சாதி அடையாளம் முக்கிய பங்களிக்கிறது!

‘தீக்கதிர்’ தலையங்கத்தில் கருத்து!

சென்னை, நவ. 21 -

அத்தலையங்கம் வருமாறு:-

உலகின் மூன்றாவது பொருளாதாரம் எனும் நிலையை நோக்கி இந்தியா முன்னேறிக் கொண்டிருப்பதாக ஒன்றிய பாஜக ஆட்சியாளர்கள் பீற்றிக் கொண்டிருக்கிறார்கள். பத்தாண்டு கால ஆட்சியில் 25 கோடி பேரை வறுமையிலிருந்து மீட்டு விட்டதாகவும் அள்ளி விடுகிறார்கள். ஆனால் உலக பட்டினிக் குறியீட்டுப் பட்டியலில் 127 நாடுகளில் இந்தியா 105 ஆவது இடத்தில் இருக்கிறது என்பது அவமானமாக இருப்பதில்லை ஆட்சியாளர்களுக்கு. அது மட்டுமின்றி இந்தியாவின் 5 வயதுக்குட்பட்ட 13.7 கோடி குழந்தைகளில் 35 சதவீதம் பேர் வளர்ச்சிக் குறை பாடுள்ளவர்கள் என்கிற அதிகாரப்பூர்வ தகவல் கள் வேதனைக்குரியவை. ஆட்சியாளர்கள் வெட்கித் தலைகுனிய வேண்டியவை.

இன்னும் குறிப்பாகச் சொல்வதென்றால் ஆப்பிரிக்க நாடுகளை விட இந்தியா மோசமான நிலையில் இருக்கிறது என்பதுதான். ஆப்பிரிக்காவின் தென்பகுதி நாடுகளான சப்சஹாரா பகுதியில் உள்ள நாடுகளை விட இந்தியா குழந்தைகள் வளர்ச்சிக் குறைபாடு விகிதத்தில் மோசமாக உள்ளது மிகவும் கவலையளிக்கக் கூடியதாகும். இந்தியாவில் ஐந்து வயதுக்குட் பட்ட குழந்தைகளில் மூன்றில் ஒரு குழந்தை வளர்ச்சிக் குறைபாடுடையவை என்கிறது ஓர் ஆய்வு. இந்த ஆய்வு உயரக் குறைபாடு ஒன்றை மட்டுமே கணக்கில் எடுத்துக்

தீக்கதிர்

2024 நவ.20 புதன்கிழமை

அதிர்ச்சியளிக்கும் ஆய்வு!

உலகின் மூன்றாவது பொருளாதாரம் எனும் நிலையை நோக்கி இந்தியா முன்னேறிக் கொண்டிருப்பதாக ஒன்றிய பாஜக ஆட்சியாளர்கள் பீற்றிக் கொண்டிருக்கிறார்கள். பத்தாண்டு கால ஆட்சியில் 25 கோடி பேரை வறுமையிலிருந்து மீட்டு விட்டதாகவும் அள்ளி விடுகிறார்கள். ஆனால் உலக பட்டினிக் குறியீட்டுப் பட்டியலில் 127 நாடுகளில் இந்தியா 105 ஆவது இடத்தில் இருக்கிறது என்பது அவமானமாக இருப்ப

கொண்டிருக்கிறது. இதர காரணிகளையும் எடுத்தால் அவை இன்னும் அதிர்ச்சியளிக்கும் உண்மை நிலையை நமக்கு உணர்த்திடும்.

அசோகா பல்கலைக்கழகத்தின் அஸ்வினி தேஷ்பாண்டே, மலேசிய மோனாஷ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ராஜேஷ் ராமச்சந்திரன் நடத்திய இந்த ஆய்வு மேலும் சில அதிர்ச்சி யான விஷயங்களை குறிப்பிடுகிறது. இந்தியா வில் குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாட்டில் சமூக அடையாளம் குறிப்பாக சாதி அடையாளம் முக்கியப் பங்கு வகிக்கிறது. இது உயர் சாதிக் குழுக்களின் குழந்தைகள், சாதிக் கட்டமைப்பின் அடிமட்டத்தில் இருக்கும் குழந்தைகளைக் காட்டிலும் வளர்ச்சிக் குறைபாடு அபாயம் 20 சத வீதம் குறைவாக உள்ளது என்றும் கூறுகிறது.

70 ஆண்டுகளாக இந்திய அரசு நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் இந்தியாவின் சாதிய மைப்பு அதாவது இந்து மதத்தை அடிப்படை யாகக் கொண்ட 4 அடுக்கு அமைப்பு வேரூன்றி யுள்ளதால் குழந்தைகள் மத்தியில் காணப்படும் வேறுபாடுகளும் மாறவில்லை என்றும் குறிப்பிடு கிறது அந்த ஆய்வு. 5 வயதுக்குட்பட்ட குழந்தை களில் மூன்றில் ஒரு பங்கினர் பட்டியல் மற்றும் பழங்குடி சமூகத்தவர் என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர் கள், கல்வியறிவு குறைந்தவர்கள், ஒடுக்கப்பட்ட சாதிகளை சேர்ந்தவர்கள் வளர்ச்சி குறை பாட்டால் பாதிக்கப்படுகின்றனர் என்பதை தெளிவாக்குகிறது இந்த ஆய்வு. பாஜக ஆட்சியாளர்களும் மோடியும் வளர்ச்சி, வளர்ச்சி என்கிறார்களே இந்த வளர்ச்சி யாருக்கானது என்பதையும் இவர்க ளின் இந்துத்துவா அரசியல் எத்தகையது என்பதையும் இந்த ஆய்வு அம்பலப்படுத்துகிறது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

வ.எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	மொத்தம்
1	த.பொ. / செ / வடக்கு	160	1

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in

செ.ம.தொ.இ/5056/ஒப்பந்தப்புள்ளி/2024

பெருநகர சென்னை மாநகராட்சி

இயந்திர பொறியியல் துறை

கீழ்காணும் பணிகளை மேற்கொள்ள கண்காணிப்பு பொறியாளர் (இயந்திரம்) அவர்களால் மறு மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது

இ.பொ.து.ந.க.எண்.எம்1 / 1512B / 2024

5 எண்ணிக்கையில் Truck Mounted Crane-கள் 5 வருட இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்புடன் கூடி கொள்முதல் செய்தல்

முன்வைப்புத் தொகை : ஒப்ப படிவத்தில் தெரிவித்துள்ளபடி

ஒப்பம் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் **05.12.2024 பிற்பகல் 3.00, மணி**

ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் **06.12.2024 பிற்பகல் 3.30 மணி**

மேலும் விவரங்களுக்கு : **https://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 5053 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **கண்காணிப்பு பொறியாளர் (இ)**

திருவள்ளூரில் கூட்டுறவு வாரவிழா!

2,833 பேருக்கு ரூ.25.03 கோடியில் கடனுதவி!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வழங்கினார்!

திருவள்ளூர் நவ 21

திருவள்ளூர் தனியார் திருமண மஹாலில் 71 ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா நடைபெற்றது. இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு 2833 பயனாளிகளுக்கு ரூ.25.03 கோடி மதிப்பீட்டில் பல்வேறு கடனுதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்

இதில் அவர் பேசியதாவது:

கூட்டுறவுத் துறையின் மூலம் ஆண்டுதோறும் நடைபெறுகின்ற அனைத்திந்திய கூட்டுறவு வார விழா நவம்பர் 14 முதல் 20 வரை சிறப்பாக நடைபெற்றது கூட்டுறவு வங்கி முதல் முதலாக திருவள்ளூர் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது அதாவது ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டமாக இருந்த பொழுது கிட்டத்தட்ட 120 ஆண்டுகள் கடந்து சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அதற்குக் காரணம் அந்த வங்கியில் ஒற்றுமையே சார்ந்துள்ளது என்பது மிக முக்கியமான ஒன்றாகும்.

தேனீக்கள் போல் ஒற்றுமையாக செயல்பட்டு கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் 7000 கோடி கூட்டுறவு வங்கிக் கடன்களை ரத்து செய்துள்ளார்கள். அந்த அளவிற்கு மக்களின் நலன் காக்கும் வகையில் செயல்படும் அரசு நம்முடைய , தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசுதான், அந்த அளவிற்கு பெண்களின் முன்னேற்றத்திற்காக திட்டங்களை செயல்படுத்தி பயனாளிகளுக்கு கிடைக்கின்ற வரை சிறப்பாக செயல்பட்டு வருகிறார்கள். உதாரணமாக மகளிர்க்கான விடியல் பயணத் திட்டம், மகளிர் உரிமைத் தொகை திட்டம், போன்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். தற்பொழுது நம் மாவட்டத்தில் 122 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகிறது. நியாய விலை கடைகள் மூலம் வழங்கப்படும் அத்தியாவசிய பொருட்களை கொரோனா காலங்களில் சிறப்பாக ஆற்றிய பெருமை கூட்டுறவு துறையைச் சேரும். எந்த ஒரு பேரிடர் காலமாக இருந்தாலும் சிறப்பாக செயல்படும் அரசு நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசுதான். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்களின் எண்ணங்களை புரிந்து கொண்டு செயல்படுத்தும் அரசு. இந்த கூட்டுறவு வார விழாவிற்கு பயனாளிகளாக வந்து பயன் பெற்றவர்களுக்கும், கூட்டுறவு வார விழாவையொட்டி நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும், சிறந்த கூட்டுறவு கடன் சங்கத்தினர்களுக்கும் வாழ்த்தி கூட்டம் சிறப்பாக நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

முன்னதாக கூட்டுறவுத் துறை மூலம் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்கினை அமைச்சர் பார்வையிட்டு பின்னர் ஜே.ஜே.166 தேவதானம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கு ரூ. 30 இலட்சம், மதிப்பீட்டில் புதிய அலுவலக கட்டடமும் மற்றும் ஜே.ஜே.166 பழைய கும்மிடிப்பூண்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் கூட்டுறவு சில்லறை விற்பனை நிலையத்தினை திறந்து வைத்து

மாவட்ட அளவில் சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயமும், கூட்டுறவு துறை சார்பாக பள்ளி மாணவர்களுக்கான கட்டுரை போட்டி, பேச்சுப்போட்டி வெற்றி பெற்ற மாணவ/மாணவியருக்கு பரிசு மற்றும் சான்றுகளும், அரசு பள்ளியில் படித்து பத்தாம் வகுப்பில் சிறந்த மதிப் பெண்கள் பெற்றவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் ரூ.10000த்திற்கான காசோலையும் வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் த. பிரபு சங்கர், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி இராஜேந்திரன், ஆ. கிருஷ்ணசாமி, டி.ஜே. கோவிந்தராஜன் , துரை சந்திரசேகர் , மாவட்ட ஊராட்சி குழு தலைவர் கே.வி.ஜி . உமா மகேஸ்வரி, காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி கூடுதல் பதிவாளர்/ மேலாண்மை இயக்குநர் ஆ.க. சிவமலர், திருவள்ளூர் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் தி. சண்முகவள்ளி, திருவள்ளூர் நகர மன்ற தலைவர் திருமதி. உதயமலர் பாண்டியன், ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர். ஜெயசீலி ஜெயபாலன், திருவள்ளூர் சரக துணை பதிவாளர் சீனிவாசன் , கூட்டுறவு சங்கங்களில் செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சமூக வலைதளங்களில் வலம் வருவது!

திருவள்ளூர் மாவட்ட 71 ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா திருவள்ளூரில் நடைபெற்றது இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு 2833 பயனாளிகளுக்கு ரூ.25.03 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு கடனுதவிகள் மாவட்ட அளவில் சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயமும், கூட்டுறவு துறை சார்பாக பள்ளி மாணவர்களுக்கான கட்டுரை போட்டி, பேச்சுப்போட்டி வெற்றி பெற்ற மாணவ/மாணவியருக்கு பரிசு மற்றும் சான்றுகளும், அரசு பள்ளியில் படித்து பத்தாம் வகுப்பில் சிறந்த மதிப்பெண்கள் பெற்றுவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் ரூ.10000த்திற்கான காசோலையும் வழங்கி வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கு ரூ. 30 இலட்சம், மதிப்பீட்டில் புதிய அலுவலக கட்டடமும் மற்றும் கூட்டுறவு சில்லறை விற்பனை நிலையத்தினை திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் த. பிரபு சங்கர், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன், ஆ.கிருஷ்ணசாமி, டி.ஜெ.கோவிந்தராஜன், துரை சந்திரசேகரன் மாவட்ட சேர்மன் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, மேலாண்மை இயக்குநர் ஆ.க. சிவமலர் இணைப்பதிவாளர் தி.சண்முகவள்ளி, நகர மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், ஒன்றிய பெருந்தலைவர். ஜெயசீலி ஜெயபாலன், சரக துணை பதிவாளர் சீனிவாசன் உள்பட பலர் உள்ளனர்.

சென்னை தெற்கு மாவட்டக் கழக இலக்கிய அணியின் புரவலர் எம்.எஸ்.மணி பேரனும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாநில துணை பொதுசெயலாளரும், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.எஸ்.பாலாஜி மகன் மருத்துவர் கௌதம், மருத்துவர் கீர்த்தி இணையரின் திருமணம் காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளரும், சிறுகுறு தொழில்துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் முன்னிலையிலும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் தலைமையிலும், சென்னை தெற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாவட்ட அமைப்பாளர் எம். எஸ்.ஹரிபாபு வரவேற்பில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார்கள்.